FACTSHEET

NSW கல்வித் திணைக்களம்

Student use of mobile phones in schools

Information for parents and carers

# பாடசாலைகளில் மாணவ-மாணவியரது கைப்பேசிப் பயன்பாடு

பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான தகவல்கள்

## உயர்நிலைப் பாடசாலைகளில் கைப்பேசி பயன்பாட்டின் மீதான தடை தற்போது நடைமுறையில் உள்ளது

NSW அரச ஆரம்பப் பாடசாலைகளில் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கைப்பேசிகளின் மீதான தடையை அடுத்து உயர்நிலைப் பாடசாலைகளில் கைப்பேசிகளின் மீதான தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பாட வகுப்பு நேரங்கள், இடைவேளைகள் மற்றும் மதிய உணவு நேரங்களில் இந்தத் தடை நடைமுறையில் இருக்கும். பாடசாலைக்குச் செல்லும் போதும் திரும்பி வரும் போதும் கைப்பேசி ஒன்றை எடுத்துச் செல்ல மாணவ-மாணவியர் அனுமதிக்கப்படுவர்.

கல்வி நோக்கங்களுக்காக, அல்லது மாணவ-மாணவியரது கற்றல் மற்றும் பொதுநலன் ஆகியவற்றை முன்னிட்டு நியாயமான காரணங்களுக்காக கைப்பேசிப் பயன்பாட்டிற்கு அனுமதி அளிக்க பாடசாலை அதிபராலும், ஆசிரியர்களாலும் இயலும்.

இந்தத் தடையின் அறிமுகத்திற்கு ஆதரவளிக்க, பல்வேறு நடைமுறைப்படுத்தல் தெரிவுகளைப் பற்றி தமது உள்ளூர் சமூகத்தினருடன் கலந்துபேசுமாறு பாடசாலைகளை NSW கல்வித் திணைக்களம் வேண்டியுள்ளது.

இந்தத் தெரிவுகளில் உள்ளடங்குவன:

**'ஆஃப்' செய்து வேறிடத்தில் வைத்தல்:** கைப்பேசிகள் நிறுத்தப்பட்டு வேறிடத்தில் வைக்கப்படும் (பொதுவாக மாணவ-மாணவியரது பாடசாலைப் 'பை'யில்). பாடசாலை நாள் முழுவதும் தொலைபேசிகள் பயன்படுத்தப்படாமல் இருக்கும்.

**பூட்டுப் பெட்டிக்குள் கைப்பேசிகளை வைத்தல்:** மாணவ-மாணவியர் கைப்பேசிகளை தம்முடன் எடுத்துச் செல்லமாட்டர்; பாடசாலை நாள் முடியும் வரை கைப்பேசியை அவர்கள் கட்டாயமாகப் பூட்டுப் பெட்டிக்குள் வைத்திருக்கவேண்டும்.

**பூட்டிய கைப்பேசிப் பை:** பாடசாலை நாளில் தமது கைப்பேசிகளை பயன்படுத்த இயலாத விதத்தில் மாணவ-மாணவியர் தமது கைப்பேசிகளை காந்த சக்தியால் பூட்டப்படும் 'பை'க்குள் வைப்பர். பாடசாலை நாள் முடியும் பொழுது 'பை'கள் காந்தசக்தியால் திறக்கப்படும்.

**முகப்பு அலுவலகத்தில் சேகரிக்கப்படும் கைப்பேசிகள்:** பாடசாலை நாளின் துவக்கத்தில் மாணவ-மாணவியர் தமது கைப்பேசிகளைப் பாடசாலையின் முகப்பு அலுவலகத்தில் இருப்பில் வைப்பர், மற்றும் பாடசாலை நாளின் இறுதியில் (அல்லது பாடசாலை வளாகங்களை விட்டு வெளியேறும் பொழுது) அவற்றைப் பெற்றுக்கொள்வர்.

**பாடம் துவங்கும் பொழுது  கைப்பேசிகள் சேகரிக்கப்படல்:** பாடம் துவங்கும் பொழுது கைப்பேசிகளை ஆசிரியர் சேகரித்து இருப்பில் வைப்பார், மற்றும் பாடம் முடிவடைந்த பிறகு மற்றும்/அல்லது மாணவ-மாணவி வகுப்பறையை விட்டு வெளியேறும் பொழுது ஆசிரியர் கைப்பேசியை மாணவ-மாணவிக்குத் திருப்பித் தருவார்.

நடைமுறைப்படுத்துவதற்காக எந்தத் தெரிவை அவர்கள் மேற்கொள்வர் என்பதை ஒவ்வொரு பாடசாலை சமூகத்தினரும் முடிவு செய்தனர்.

## பாடசாலை நேரங்களில் பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுடன் மாணவ-மாணவியர் தொடர்பாடல் கொள்ளல்

பாடசாலை இயங்கிக்கொண்டிருக்கும் நாள் வேளையில் மாணவ-மானவியருடன் பெற்றோர்கள் அல்லது பராமரிப்பாளர்கள் தொடர்பு கொள்வதற்கான வேளைகள் எழக்கூடும். பாடசாலை அலுவலகத்தின் ஊடாக பெற்றோர்கள் அல்லது பராமரிப்பாளர்கள் பாடசாலையுடன் தொடர்புகொள்ளலாம், மற்றும் அவசர வேளைகளில் பாடசாலை அலுவலகத்தின் ஊடாக மாணவ-மாணவியராலும் பெற்றோர்கள் அல்லது பராமரிப்பாளர்களுடன் தொடர்புகொள்ள இயலும்.

### தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை

உங்களுக்கு மேலும் தகவல்கள் தேவைப்பட்டால் தயவு செய்து பாடசாலையை அழையுங்கள். உங்களுடைய விசாரிப்பில் உதவ மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் உங்களுக்குத் தேவைப்பட்டால், தயவு செய்து 131 450-ஐ அழைத்து உங்கள் மொழியில் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேளுங்கள்.

நீங்கள் அழைக்க விரும்பும் இலக்கத்தைத் தொலைபேசி இயக்குநருக்குத் தாருங்கள், அதையடுத்து உங்களுடைய உரையாடலில் உங்களுக்கு உதவுவதற்காக மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரை அவர் இணைப்பிற்குக் கொண்டுவருவார். இந்த சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படாது.

NSW GOVERNMENT